# வாழ்விக்கும் வைணவம்

**ஸ்ரீவைஷ்ணவச் சூடாமணி D.A.ஜோசப், பாண்டிச்சேரி**
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Cell. 9600824414
Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

'மரணத்திற்குப் பின் வரும் வாழ்வைப் பற்றிக் கூறுங்கள் என்று கருடன் ஸ்ரீமந் நாராயணனைக் கேட்ட போது, அந்தக் கேள்விக்கு நேரடியாக பெருமாள் பதில் சொல்லவில்லை. மாறாக, பிறப்பு இறப்பு இவைகளைப் பற்றிய ஒரு பொதுவான குட்டிச் சொற்பொழிவு ஒன்று ஆற்றுகிறார். ஏனென்றால் வைதீக மதத்தின் பெருமையே எந்த விஷயமானாலும் அதைத் துருவிப் பார்த்து அதன் அடிப்படை என்ன, அந்த அடிப்படைக்கு அடிப்படை என்ன என்று மூலத்துக்கு மூலத்தைக் கண்டுபிடிப்பது தானே!

உலகில் 84 லட்சம் பிறவி வகைகள் உண்டு என்று கூறி பெருமாள் தொடங்குகிறார். இவற்றில் 21 லட்சம் வகைகள் முட்டையிலிருந்து தோன்றுவன, இன்னொரு 21 லட்சம் வகைகள் பூமி மண்ணிலிருந்து தோன்றும் மரம் செடி கொடி முதலியவை அடுத்த 21 லட்சம் பிறவிகள், ஒரு தாயின் கர்பப்பையிலிருந்து தோன்றக் கூடியவை. மீதி 21 லட்சம் வியர்வையிலிருந்து தோன்றும் பிறவி வகைகள் என்கிறார் பெருமாள்.

இந்த 84 லட்சம் வகையான பிறவிகளிலும் சிறந்த பிறவி மானிடப் பிறவி என்பது எம்பெருமானுடைய தீர்ப்பு. அதைத் தான் நம் முன்னோர்கள் "அரிது அரிது மானிடராதல் அரிது" என்று வழிமொழிந்தார்கள். மனிதப் பிறவியை, உயர்வானதாக அவர் கூறும் காரணங் களில் முதன்மையாக கூறப்படுவது எது என்றால் பொருள்களைக் கண்டு இன்புறக் கண்களும் ஒலிகளைக் கேட்டு இன்புறக் காதுகளும், பலவிதமான சுவைகளை உணர்ந்து இன்புற நாக்கும், நறுமணங்களைத் துய்க்க மூக்கும், காம இன்பத்தைப் பரிபூர்ணமாக உணர்வதற் குரிய உடலும், நன்மை தீமைகளைப் பகுத்து அறிய அறிவும் மனிதர்களுக்கு இருப்பது போல் மற்ற பிறவிகளுக்கு இல்லை என்பதே.

இந்த மனித இனத்தில், பாரத தேசத்தில் வசிப்பவர்களே மிகவும் புண்ணியம் செய்தவர்கள் என்கிறார் விஷ்ணு. ஏனென்றால் இங்கேதான் முப்பத்து முக்கோடி தேவர்களும் எப்போதும் சாந்நித்யமாக இருப்பார்கள். பிதுர்க் கடன்களும் யாக காரியங்களும் இங்கே தான் நடக்கின்றன. பிரம்ம ரிஷிகளும் இங்கே தான் தவம் செய்கிறார்கள். சாத்விக குணமுடைய கறுப்பு நிறமுள்ள 'கிருஷ்ணசாரம்' என்ற பெயருள்ள மான்கள் இந்தப் புண்ணிய பூமியிலே மட்டும் தான் சஞ்சரிக்கின்றன என்று திருமால் இங்கே ஒரு குறிப்பு தருகிறார். விலங்கியல் ஆய்வாளர்களுக்கு இது ஆர்வத்தைத் தூண்டும் ஆய்வுத் தலைப்பாக இருக்கலாம்.

மனிதப் பிறவி ஞானத்துக்காக ஏற்பட்டது. என்கிறார் திருமால். ஐம்புல இன்பங்கள் மற்ற உயிர்களுக்கும் உண்டு.

மனத்தை அடக்கவும், அறிவை விளக்கவும், ஆத்மாவை ஈடேற்றவும் மனித சரீரத்துக்குத் தான் வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன என்று கூறிவிட்டு மனித்ர்கள் அந்தப் பிறவியை முறையாகப் பயன்படுத்திக் கொள்ள வில்லையே என்று மிகவும் வருந்துகிறார், அந்த பதிதபாவனர்.

'தேனிடைக் கரும்பின் சாற்றைத் திருவினை மருவி வாழார் மானிடப் பிறவியந்தோ மதிக்கிலர் கொள்க தந்தம் ஊனிடைக் குரம்பை வாழ்க்கைக்கு உறுதியே வேண்டினாரே' என்று திருமங்கையாழ்வார் வயிறெரிந்தது போல கருணையே வடிவான நம் காகுத்தனும் மனிதர்கள் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்ற மூவாசைகளால் தம் ஜென்மாவை பாழ்பண்ணிக் கொள்வது பற்றி பரிவுடன் கருடனிடம் கூறி வருந்துகிறார். குரலோசைக் கேட்டு ஏமாந்து அசையாமல் நின்று வேடனால் பிடிக்கப்படும் மான் போல, வேட்டைக் காரர்கள் ஏவிய பெண்யானையைத் தொடர்ந்து சென்று படுகுழியில் விழும் ஆண்யானையைப் போல, எரியும் விளக்கைப் பார்த்து கனியென்று ஏமாந்து அதில் விழுந்து சாகும் விட்டில் பூச்சிகளைப் போல, தூண்டில் முள்ளில் உள்ள புழுவைப் பார்த்து மாட்டிக் கொள்ளும் மீனைப் போல மனிதர்கள் காதாலும், கண்ணாலும், நாவாலும், நாசியாலும் சரீர வேட்கையாலும் வீணாய் அழிந்து போகிறார்களே, என்று இந்த இடத்தில் பெருமாள் புலம்புவது, தன் தனயனுக்காக கண்ணீர் வடிக்கும் ஒரு பொறுப்புள்ள தகப்பனை நினைவு படுத்துகிறது.

பிறப்பும் இறப்பும், நரகமும் துன்பமும், மனிதனிம் மனம் அடங்காமையினால் தானே ஏற்படுகின்றன என்று வியந்து ஸ்ரீஹரி ஆசை தான் துன்பத்துக்குக் காரணம் என்ற முதமொழியை புலப்படுத்துகிறார். திருப்தி என்ற செல்வம் தான் செல்வத்துள் சிறந்த செல்வம் என்று இந்த இடத்தில் விளக்குகிறார். நூறு பணத்தை அடைந்தவன் ஆயிரத்துக்கு ஆசைபடுவான் என்றும், ஆயிரத்தை அடைந்தவன், லட்சத்துக்கு ஆசைப்படுவன் என்றும், லட்சத்தை அடைந்தவன் கோடியை அடையத் துடிப்பான் என்றும் அதையும் அடைந்துவிட்டால் இந்த அகில உலகமும் தனக்கு வேண்டும் என்று பரிதவிப்பான் என்றும் ஆசையின் வளர்ச்சியையும் ஞானத்தின் தளர்ச்சியை யும் ஆரம்பப்பள்ளி மாணவனுக்குச் சொல்வது போல் அழகுற விவரிக்கிறார் அரங்கநாதர்.

இப்படியெல்லாம் சம்பாதித்தவன் இறுதிக்காலத்தில் இறந்தபின் அதை அள்ளிக் கொண்டா போகப் போகிறான். யாருக்காக சம்பாதித்தானோ அவர்கள் எல்லாம் இவனுடைய முதுமை காலத்தில் இவனை புறக்கணிப்பார்கள். கடுஞ்சொல் கூறி ஏசுவார்கள். சுடுகாட்டுக்குப் போகும் போது அவர்கள் யாரும் அவனுடைய ஆத்மாவுடன் போக போவதில்லை. அவன் ஆத்மாவோடு பயணிப்பது அவன் செய்த பாவபுண்ணியங்கள் மட்டுமே. ஆவைதான் மரணத்துக்குப் பிறகு இவனுடைய அந்தஸ்து என்ன என்று நிர்ணயிப்பவை! செத்தால் அந்த ஜீவன் படும் பாடுகள் என்ன என்பதை உயிருடன் இருக்கும் போது மனிதர்கள் உணர்வதில்லை. கடவுளை நினைக்காமல் கடமையை உணராமல் அவர்கள் வாழ்ந்த வாழ்வின் பயனை அவர்கள் இறந்த பின் தான் உணர்கிறார்கள், என்று ஒரு உணர்வு பூர்வமான முன்னுரையைக் கூறிவிட்டு, பெருமாள் சாவுக்குப் பின் நடப்பதென்ன என்பதை சொல்லத் தொடங்குகிறார். அதை அடுத்த இதழில் கூறுகிறேன்.